WWW.KALVIKURAL.COM

தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை – 600 006.

ந.க.எண் 16900 / டி1 / 2014, நாள் 29.10.2014

பொருள்: தொடக்கக் கல்வி – காலியாக உள்ள ஆசிரியர் பணியிடங்கள் பதவி உயர்வு மூலம் நிரப்புதல் – மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்குதல் – சார்ந்து.

பார்வை:

1. அரசாணை நிலை எண் 137, பள்ளிக் கல்வித் (பக.5(1)) துறை, நாள் 09.06.2014
2. அரசுக் கடித எண் 15468/பக5(1)/2014–3, நாள் 09.06.2014
3. தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், ந.க. எண் 16900/டி1/2014, நாள் 10.06.2014 மற்றும் 25.06.2014
4. அரசாணை நிலை எண் 165, பள்ளிக் கல்வித் (பக.3(1)) துறை, நாள் 15.10.2014
5. அரசுக் கடித எண் 34666/தொக(1)(1)/2014–1, நாள் 20.10.2014

– – –

தொடக்கக் கல்வி இயக்ககத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் ஊராட்சி ஒன்றிய, நகராட்சி, அரசு தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் 31.10.2014 அன்றைய நிலவரப்படி காலியாக உள்ள நடுநிலைப் பள்ளித் தலைமையாசிரியர் பணியிடங்களை 01.11.2014 அன்று கலந்தாய்வு முறையில் பதவி உயர்வு மூலம் நிரப்பிடவும், நடுநிலைப் பள்ளி தலைமையாசிரியர் பதவி உயர்வு வழங்கப்படுவதால் ஏற்படும் ஊட்டுப் பதவியான பட்டதாரி ஆசிரியர் மற்றும் தொடக்கப் பள்ளித் தலைமையாசிரியர் ஆகிய பணியிடங்களையும் மற்றும் ஏதேனும் காரணங்களால் காலியாக இருக்கும் தொடக்கப் பள்ளித் தலைமை ஆசிரியர், பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களையும் அன்றே பதவி உயர்வு மூலம் நிரப்பிடவும் அனைத்து மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், பார்வை 4ல் காணும், அரசாணை நிலை எண் 165, பள்ளிக் கல்வித் (பக.3(1)) துறை, நாள் 15.10.2014ன்படி, அரசாணை எண் 107, பணியாளர் நிர்வாகச் சீர்திருத்தத்துறை, நாள் 08.08.2009ன் காரணமாக, முந்தைய ஆண்டுகளில் இதர வகையில் தகுதியிருந்தும், மறுக்கப்பட்டவர்கள் தற்போது பணியிலிருப்பின், அவர்களது பெயரையும் தகுதிவாய்ந்தோர் முன்னுரிமைப் பட்டியலில் சேர்த்து மேற்காணும் பதவி உயர்வு கலந்தாய்வினை 01.11.2014 அன்று எவ்வித புகாருக்கும் இடமின்றி சிறப்பாக நடத்திடுமாறு அனைத்து மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தொடக்கக் கல்வி இயக்குநர்

பெறுநர்

அனைத்து மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்கள்

WWW.KALVIKURAL.COM

வேலூர் மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலரின் செயல்முறைகள், வேலூர் –632 004.

ந.க.எண்.2375/ஆ5/2014, நாள்.30.10.2014
ஜய ஆண்டு ஐப்பசி 13 – திருவள்ளுவராண்டு–2045

பொருள் – தொடக்கக்கல்வி – வேலூர் மாவட்டம் – காலியாக உள்ள ஆசிரியர் பணியிடங்கள் பதவி உயர்வு மூலம் நிரப்புதல் – கலந்தாய்வு நடைபெறுதல் – தகவல் தெரிவித்தல் – சார்பு.

பார்வை – சென்னை, தொடக்கக்கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.16900/டி1/2014, நாள் 29.10.2014.

*****

பார்வையில் கண்டுள்ள தொடக்கக்கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகளின் நகல் இத்துடன் இணைத்து அனைத்து உதவித் தொடக்கக்கல்வி அலுவலர்களுக்கும் அனுப்பலாகிறது.

மேற்காண் செயல்முறைகளில் தெரிவித்துள்ளவாறு செயல்படுமாறு தெரிவிக்கப்படுகிறது. மேற்காண் பொருள் சார்பான பதவி உயர்வு கலந்தாய்வு 01.11.2014 அன்று காலை 10.00 மணிக்கு வேலூர் மாவட்டத் தொடக்கக்கல்வி அலுவலகத்தில் நடைபெறும். இத்தகவலை சம்பந்தப்பட்ட பதவி உயர்வுக்கு தகுதியான கலந்தாய்வில் கலந்து கொள்ளும் ஆசிரியர்களுக்கு தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். கலந்தாய்வு நடைபெறும் முன்னர் தொடக்கக்கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகளில் தெரிவித்துள்ள அறிவுரைகளை பின்பற்றி முன்னுரிமை மற்றும் முன்னுரிமை பட்டியலை திருத்தம் மேற்கொண்டு தயார் நிலையில் இருக்குமாறு அனைத்து உதவித் தொடக்கக்கல்வி அலுவலர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது.

30-10-14

மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்,
வேலூர்–4.

இணைப்பு – பார்வையில் கண்டுள்ள செயல்முறைகள்.

பெறுநர்
அனைத்து உதவித் தொடக்கக்கல்வி அலுவலர்கள்.

30/10/14

நக